**சுருக்கம்**

கூட்டுறவுத் துறை – 2014–2015–ம் ஆண்டிற்கான மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு – 616 கூட்டுறவுச் சங்கங்களில் பாதுகாப்பு அறைகள், பாதுகாப்புக் கதவுகள் மற்றும் பாதுகாப்பு பெட்டகங்கள் அமைத்தல் ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்(சிஎன்1) துறை

அரசாணை (நிலை) எண். 114 நாள். 24.10.2014

ஜய வருடம்
ஐப்பசி மாதம் 7ம் நாள்.
திருவள்ளுவர் ஆண்டு 2045

படிக்க

1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கடிதம் எண். 55340 /2014 வேகதி2 நாள் 25.08.2014
2. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கடிதம் எண். 80125/2014 விச1 நாள். 28.08.2014

----

**ஆணை**

2014–2015–ம் ஆண்டிற்கான கூட்டுறவுத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள் :–

''கிராமங்களில் உள்ள மக்களும் தங்களுடைய நகைகள், முக்கிய ஆவணங்கள் ஆகியவற்றை பாதுகாப்புடன் வைக்கவும் மற்றும் சங்கங்களில் நகைக்கடனுக்கு ஈடாக வைக்கப்படும் நகைகள், சங்கத்தில் உள்ள ரொக்கங்கள் ஆகியவற்றை பாதுகாக்கவும் 600 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், 4 தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் மற்றும் 12 வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் ஆக மொத்தம் 616 கூட்டுறவு சங்கங்களில் பாதுகாப்பு அறைகள், பாதுகாப்புக் கதவுகள் மற்றும் பாதுகாப்பு பெட்டகங்கள் ஆகியவற்றை அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டுள்ளது''.

3. 2013–14 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட 50 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் 25 வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கங்களில் பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை அமைக்கப்படும் என்ற அறிவிப்பினை செயல்படுத்த ஏதுவாக அரசாணை (நிலை) எண். 109 கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (சிஎன்1) துறை நாள்: 02.07.2013 ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. இதைப்போன்று தற்போது 2014–15 ஆம் ஆண்டுக்கான அறிவிப்பைச் செயல்படுத்த இணைப்பில் கண்டுள்ள சங்கங்கள் மண்டல இணைப்பதிவாளர்களால் தெரிவு செய்யப்பட்டு முன்மொழிவுகள் பெறப்பட்டுள்ளன.

| வ. எண் | பொருள் | தெரிவு செய்யப்பட்ட சங்கங்களின் எண்ணிக்கை | திட்டத்தினை செயற்படுத்த நிதி ஆதாரம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி | சங்கத் தின் சொந்த நிதி | ஒருங்கி ணைந்த கூட்டுறவு வளர்ச்சி திட்ட நிதி | மொத்த சங்கங்கள் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1 | பாதுகாப்பு கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை (PACCS) | 445 | 372 | 43 | 30 | 445 |
| 2 | பாதுகாப்பு கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை (PCARDB) | 4 | 4 | 0 | 0 | 4 |
| 3 | பாதுகாப்பு அறை மட்டும் | 20 | 20 | 0 | 0 | 20 |
| 4 | பாதுகாப்பு கதவு மட்டும் | 75 | 68 | 7 | 0 | 75 |
| 5 | பாதுகாப்பு பெட்டகம் | 60 | 55 | 5 | 0 | 60 |
| | மொத்தம் | **604** | **519** | **55** | **30** | **604** |

5. எனவே, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினைச் செயற்படுத்த ஏதுவாக 372 சங்கங்கள் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்தும் 43 சங்கங்கள் தத்தமது சொந்த நிதியிலிருந்தும், 30 சங்கங்கள் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்தும் ஆக மொத்தம் 445 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களிலும், மேலும், கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி உதவி பெறுவதன் மூலம் 4 தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் பாதுகாப்பு கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை கட்டவும், 20 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி உதவி பெறுவதன் மூலம் பாதுகாப்பு அறை மட்டும் கட்டவும், 68 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி

நிதியிலிருந்தும் 7 சங்கங்கள் சொந்த நிதியிலிருந்தும் ஆக மொத்தம் 75 சங்கங்களில் பாதுகாப்பு கதவு மட்டும் அமைக்கவும், 55 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி உதவி மூலமும், 5 சங்கங்கள் சொந்த நிதி மூலமும், ஆக மொத்தம் 60 சங்கங்களில் பாதுகாப்பு பெட்டகம் மட்டும் அமைத்திடவும், மேலும், 12 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்களில் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி மூலம் பாதுகாப்பு கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை கட்டவும் உரிய ஆணை வழங்கிடக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அரசினை கேட்டுக்கொண்டுள்ளார்.

6. மேலும், 31.07.2014–இல் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.100.18 கோடி நிலுவை உள்ளது எனவும், இத்திட்டத்தினை செயற்படுத்த, கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி, சங்கங்களின் சொந்த நிதி மற்றும் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சி திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுவதால், அரசு நிதி உதவி ஏதும் கோரப்படாது எனவும், மேலும், இத்திட்டத்திற்காக கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து வட்டியில்லாக் கடனாகப் பெறும் நிதியுதவி தொகையை 5 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் அனுமதிக்கலாம் எனவும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அரசுக்கு தெரிவித்துள்ளார்.

7. மேற்கூறிய சூழ்நிலையில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து அதனை ஏற்று மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்த ஏதுவாக இணைப்பு 1 முதல் VI ல் 616 கூட்டுறவு சங்கங்களில் பாதுகாப்பு அறைகள், பாதுகாப்பு கதவுகள், பாதுகாப்பு பெட்டகங்கள் அமைக்க மேலே பத்தி 6–ல் கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எம்.பி. நிர்மலா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை – 10.
மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஜி) துறை, சென்னை – 9.
இகோ/ உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

இணைப்பு – 1

கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை

அரசாணை எண். 114 நாள். 24.10.2014

**2014–15 ஆம் ஆண்டில் பாதுகாப்பு கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை கட்டத் தெரிவு செய்யப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் விவரம்**

| | | | திட்டத்தினை செயற்படுத்த நிதி ஆதாரம் | | | |
|---|---|---|---|---|---|---|
| வ. எண் | மண்டலம் | தெரிவு செய்யப்பட்ட சங்கங்களின் எண்ணிக்கை | கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி | சங்கத்தின் சொந்த நிதி | ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சி நிதி | மொத்த சங்கங்கள் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | அரியலூர் | 1 | 1 | 0 | 0 | 1 |
| 2 | கோயம்புத்தூர் | 1 | 1 | 0 | 0 | 1 |
| 3 | கடலூர் | 31 | 26 | 5 | 0 | 31 |
| 4 | திண்டுக்கல் | 35 | 5 | 0 | 30 | 35 |
| 5 | காஞ்சிபுரம் | 3 | 3 | 0 | 0 | 3 |
| 6 | கன்னியாகுமரி | 10 | 10 | 0 | 0 | 10 |
| 7 | கிருஷ்ணகிரி | 1 | 1 | 0 | 0 | 1 |
| 8 | மதுரை | 25 | 25 | 0 | 0 | 25 |
| 9 | நாகப்பட்டினம் | 3 | 3 | 0 | 0 | 3 |
| 10 | நாமக்கல் | 2 | 2 | 0 | 0 | 2 |
| 11 | பெரம்பலூர் | 1 | 1 | 0 | 0 | 1 |
| 12 | இராமநாதபுரம் | 24 | 24 | 0 | 0 | 24 |
| 13 | சேலம் | 1 | 1 | 0 | 0 | 1 |
| 14 | சிவகங்கை | 12 | 12 | 0 | 0 | 12 |
| 15 | தஞ்சாவூர் | 34 | 34 | 0 | 0 | 34 |
| 16 | தேனி | 25 | 24 | 1 | 0 | 25 |
| 17 | திருநெல்வேலி | 6 | 6 | 0 | 0 | 6 |
| 18 | திருவள்ளூர் | 22 | 22 | 0 | 0 | 22 |
| 19 | திருவாரூர் | 32 | 32 | 0 | 0 | 32 |
| 20 | தூத்துக்குடி | 1 | 1 | 0 | 0 | 1 |
| 21 | திருச்சிராப்பள்ளி | 7 | 5 | 2 | 0 | 7 |
| 22 | விழுப்புரம் | 142 | 107 | 35 | 0 | 142 |
| 23 | விருதுநகர் | 26 | 26 | 0 | 0 | 26 |
| | | 445 | 372 | 43 | 30 | 445 |

## இணைப்பு –2

| 2014–15 ஆம் ஆண்டில் பாதுகாப்பு கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை கட்டத் தெரிவு செய்யப்பட்ட தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் விவரம் | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | திட்டத்தினை செயற்படுத்த நிதி ஆதாரம் | | |
| வ. எண் | மண்டலம் | தெரிவு செய்யப்பட்ட வங்கிகளின் எண்ணிக்கை | கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி | சங்கத்தின் சொந்த நிதி | மொத்த சங்கங்கள் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | திண்டுக்கல் | 1 | 1 | 0 | 1 |
| 2 | நாமக்கல் | 1 | 1 | 0 | 1 |
| 3 | திருநெல்வேலி | 1 | 1 | 0 | 1 |
| 4 | திருச்சிராப்பள்ளி | 1 | 1 | 0 | 1 |
| | **மொத்தம்** | **4** | **4** | **0** | **4** |

## இணைப்பு –3

| 2014–15 ஆம் ஆண்டில் பாதுகாப்பு அறை மட்டும் கட்டத் தெரிவு செய்யப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் விவரம் | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | திட்டத்தினை செயற்படுத்த நிதி ஆதாரம் | | |
| வ. எண் | மண்டலம் | தெரிவு செய்யப்பட்ட சங்கங்களின் எண்ணிக்கை | கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி | சங்கத்தின் சொந்த நிதி | மொத்த சங்கங்கள் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | புதுக்கோட்டை | 12 | 12 | 0 | 12 |
| 2 | திருப்பூர் | 8 | 8 | 0 | 8 |
| | **மொத்தம்** | **20** | **20** | **0** | **20** |

## இணைப்பு – 4

| 2014–15 ஆம் ஆண்டில் பாதுகாப்பு கதவு மட்டும் நிறுவத் தெரிவு செய்யப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் விவரம் | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | திட்டத்தினை செயற்படுத்த நிதி ஆதாரம் | | |
| வ. எண் | மண்டலம் | தெரிவு செய்யப்பட்ட சங்கங்களின் எண்ணிக்கை | கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி | சங்கத்தின் சொந்த நிதி | மொத்த சங்கங்கள் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | கடலூர் | 53 | 47 | 6 | 53 |
| 2 | ஈரோடு | 2 | 2 | 0 | 2 |
| 3 | நாமக்கல் | 1 | 0 | 1 | 1 |
| 4 | புதுக்கோட்டை | 1 | 1 | 0 | 1 |
| 5 | தஞ்சாவூர் | 6 | 6 | 0 | 6 |
| 6 | தூத்துக்குடி | 4 | 4 | 0 | 4 |
| 7 | திருச்சிராப்பள்ளி | 3 | 3 | 0 | 3 |
| 8 | திருப்பூர் | 3 | 3 | 0 | 3 |
| 9 | விழுப்புரம் | 2 | 2 | 0 | 2 |
| | **மொத்தம்** | **75** | **68** | **7** | **75** |

## இணைப்பு – 5

| 2014–15 ஆம் ஆண்டில் இரும்பு பெட்டகம் நிறுவத் தெரிவு செய்யப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களின் விவரம் | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | திட்டத்தினை செயற்படுத்த நிதி ஆதாரம் | | |
| வ. எண் | மண்டலம் | தெரிவு செய்யப்பட்ட சங்கங்களின் எண்ணிக்கை | கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி | சங்கத்தின் சொந்த நிதி | மொத்த சங்கங்கள் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | கடலூர் | 7 | 4 | 3 | 7 |
| 2 | தருமபுரி | 2 | 2 | 0 | 2 |
| 3 | ஈரோடு | 2 | 2 | 0 | 2 |
| 4 | கிருஷ்ணகிரி | 2 | 2 | 0 | 2 |
| 5 | மதுரை | 2 | 2 | 0 | 2 |
| 6 | தஞ்சாவூர் | 20 | 20 | 0 | 20 |
| 7 | தேனி | 3 | 1 | 2 | 3 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **8** | தூத்துக்குடி | 19 | 19 | 0 | 19 |
| **9** | திருப்பூர் | 1 | 1 | 0 | 1 |
| **10** | திருவாரூர் | 2 | 2 | 0 | 2 |
| | **மொத்தம்** | **60** | **55** | **5** | **60** |

## இணைப்பு – 6

| **2014–15 ஆம் ஆண்டில் இரும்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறைகள் கட்ட தெரிவு செய்யப்பட்டுள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் விவரம்** | | |
|---|---|---|
| **வ. எண்** | **மண்டலம்** | **வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் பெயர்** |
| **(1)** | **(2)** | **(3)** |
| **1.** | தஞ்சாவூர் | பாபநாசம் |
| **2.** | | பட்டுக்கோட்டை |
| **3.** | | ஒரத்தநாடு |
| **4.** | திருப்பூர் | அவிநாசி |
| **5.** | | உடுமலைப்பேட்டை |
| **6.** | திருநெல்வேலி | அம்பாசமுத்திரம் |
| **7.** | ஈரோடு | பெருந்துறை |
| **8.** | | ஈரோடு |
| **9.** | | பவானி |
| **10.** | இராமநாதபுரம் | பரமக்குடி |
| **11.** | | திருவாடணை |
| **12.** | திருவாரூர் | திருவாரூர் |

எம்.பி. நிர்மலா
அரசு முதன்மைச் செயலாளர்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்